## இலங்கைவைப்புக காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதார திட்டம் - 2015

இலங்கை வைப்புக்காப்புறுதிமற்றும்திரவத்தன்மைஆதாரதிட்டத்தின்2015திசெம்பர்31இல்உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாச்சல் கூற்று மற்றும் முக்கியகணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனையவெளிப்படுத்தல்தகவல்களின்பொழிப்புக்களையும்உள்ளடக்கிய2015திசெம்பர்31இல்முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2010 செப்தெம்பர் 28 ஆந் திகதிய 1673/11 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்றுதி திட்ட பிரமாணங்களின் 10.3 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருதத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 திட்டத்தின் குறிக்கோள்

நாணயச் சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 422) 32 ஈ பிரிவின் கீழ் நாணயச் சபையின் தலைவரினால் 2010 செப்தெம்பர் 28 ஆந் திகதிய 1673/11 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி திட்ட பிரமாணங்களின் கீழ் இத் திட்டம் தாபிக்கப்பட்டது. நிதி நிறுவனங்களின் முறிவடைதல்களிலிருந்து சிறிய வைப்பாளர்களை பாதுகாப்பதற்காக பொறிமுறையொன்றை ஆரம்பமாக வடிவமைத்து, அதன் மூலம் சிறிய வைப்பாளர்களின் நம்பகத் தன்மையினை பராமரிப்பதன் ஊடாக நிதி நிறுவனங்களின் நிலைபேறான தன்மையினை மேம்படுத்துவதே திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 - 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக

கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதார திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் நேரொத்த ரூபா 6,323.31 மில்லியன் வரிக்கு முன்னரான மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,868.53 மில்லியன் வரிக்கு முன்னரான மிகையை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் முறையே ரூபா 545.22 மில்லியன் அல்லது 8.7 சதவீத முன்னேற்றத்தை காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த செலவினம் 255.02 மில்லியனால் அதிகரித்தமைக்கு எதிராக மொத்த வருமானம் ரூபா 800.24 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டமையே இம்முன்னேற்றத்திற்கான முக்கிய காரணமாக இருந்தது

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 நிதியத்தின் நிலைமை

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் படி, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டத்தின் நிதியத்தில் உள்ள மீதி நேரொத்த முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 18.55 பில்லியன் மீதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 6.87 பில்லியன் அல்லது 37 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.3 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.3.1 இனங்காணப்பட்ட நட்டம்

முதன்மை வணிகரால் ஒப்பந்த உடன்படிக்கை முறிவடைந்த காரணத்தினால் 2016 மார்ச் 31 இல் முதிர்வடையும் மறு மீள்கொள்வனவு முதலீடு தொடர்பில் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காலக்கழிவு நட்டமாக ரூபா 144,251,239 அங்கீகரிக்கப்பட்டிருந்தது.